**இலங்கை சமூக பாதுகாப்புச் சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் தொடர்புடைய தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளமை.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| | உரி நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நியமம் 01இன் 76ஆம் பந்தியின் பிரகாரம், அறிக்கையிடல் திகதியின் பின்னர் 12 மாதங்களினுள் தீர்வையாகும் என எதிர்பார்க்கின்ற சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 370,876,767 தொகையான ஒரு வருடத்தினுள் முதிர்வடையவுள்ள நிலையான வைப்புக்கள் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | முதிர்வடையும் நாளில் மீள் முதலீடு இடம்பெறுகின்றமையால், அந்த முதலீட்டினை நடைமுறைப் பொறுப்புகள் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், அரச துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் 2021ஆம் ஆண்டு முதல் 12 மாதங்களினுள் தீர்வையாகும் என எதிர்பார்க்கப்படுகின்ற முதலீடுகள் நடைமுறைப் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | ஒரு வருடத்திலும் குறைவான காலத்தினுள் தீர்வையாக்குவதற்கு எதிர்பார்த்துள்ள சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களான இனங்காணப்பட வேண்டியமை. |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 90ஆம் பந்தியின் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் அறிக்கையிடப்பட்டுள்ள போது நிதிக்கூற்றுக்களில் அந்த மீள்மதிப்பீடு தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், சபையினால் மீளாய்வாண்டின் போது காணிகள் மற்றும் கட்டிடங்கள் முறையே ரூபா 97,050,000 மற்றும் ரூபா 74,449,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த | சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் 2020ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் விடுபட்டுள்ளது. எனினும், 2021ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் இவ்வாறான வெளிப்படுத்தல்கள் கட்டாயமாக மேற்கொள்வதற்கு இணக்கப்பாட்டினை தெரிவிக்கின்றேன். | உரிய கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அதற்குரிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | | |
| (இ) | நியம இலக்கம் 49இன் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகள் மீளமதிப்பீடு செய்யப்படும் போது அந்த சொத்துக்கள் உரித்தான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் முழுத் தொகுதியும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2020 சனவரி 01ஆந் திகதியில் உள்ளபடியாக சபையிடம் காணப்பட்ட ரூபா 161,241,180 கிரயமான கட்டிடங்கள் காணப்பட்ட போதிலும், மீள்மதிப்பீடு செய்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது ரூபா 138,151,000 கிரயமான கட்டிடங்கள் மாத்திரம் ஆகும். | கட்டிடங்களின் பழுதுபார்த்தலுக்காக மற்றும் புதிய பகுதிகளை சேர்த்தல் கிரயமும் உள்ளடடங்களாக மீண்டும் கட்டிடங்கள் மற்றும் ஆதனங்களிக் வகுப்பு மீள்மதிப்பிடப்பட்டு சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு இணங்குகின்றேன். | உரிய கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சீராக்கம் செய்யப்படாத முன்னைய வருடத்தின் சீராக்கமொன்றான ரூபா 1,251,339 ஆன சீராக்கமொன்று காசுப்பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டின் இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டுள்ள ரூபா 1,251,339 தொகையினும் 06 மாதங்களைக் கடந்த காசோலைகளை மீள வருமானத்திற்கு எடுத்தல் 2019ஆம் ஆண்டின் உரிய அளவினை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட அட்டுறுச் செலவினங்களை மீள வருமானத்திற்கு எடுத்தல் ஆகிய விடயங்கள் உள்ளடங்குகின்றன. இந்த சீராக்கங்கள் 2019ஆம் | உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் என்பதால் Accumulated Fund கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டுள்ளமையால், அந்த பெறுமதி இவ்வருட காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | செயற்பாட்டு நடவடிக்கைகளினுள் காண்பிக்கப்பட்டுள்ள ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு பெறுமதியான ரூபா 11,258,357 இனுள் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டின் போது கழிக்கப்பட வேண்டிய ரூபா 60,599 ஆன பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிராமையால் அந்த அளவினால் பெறுமானத்தேய்வு மிகைக்கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி 1.5.2(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த பெறுமானத்தேய்வு, கட்டிடங்கள் உள்ளடங்கிள் ஆதனங்களின் வகுப்பு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு திருத்துவதற்கு இணங்குகின்றேன். | பெறுமானத்தேய்வினை சரியாக கணிப்பிடுவதற்கு மற்றும் மிகைக்கணிப்பீட்டினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2006இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தி | பிரதான பெறுகைகள் திட்டம் ஆகக் குறைந்தது மூன்று (3) வருட காலப்பகுதிக்காக எதிர்பார்த்துள்ள பெறுகை நடவடிக்கைகளை விபரமாக விவரித்து தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், இதன் பிரகாரம் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020ஆம் ஆண்டு உள்ளடங்களாக 3 வருடங்களுக்காக நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்று உரிய பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், 2021, 2022 மற்றும் 2023ஆகிய வருடங்களுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | சட்டங்கள், வீதிகள் மற்றும் பிரமாணங்களுக்கமைய செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 12,041,238 ஆன பற்றக்குறை ஆனதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 6,647,530 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 5,393,708 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பற்றாக்குறைக்கு ரூபா 134,503,000 ஆன முன்னைய வருடதடதின் நன்கொடைப் பெறுவனவு மீளாய்வாண்டின் போது ரூபா 121,777,365 வரை குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சமூக பாதுகாப்பு ஓய்வூதிய நிதியத்திலிருந்து சபையின் ஊழியர்களுக்கு 9.5 சதவீத வட்டிக்கு சம்பள முற்பணக் கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த முற்பணத் தொகையில் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 9,038,538 ஆக காணப்பட்டது. | நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு பணிப்பாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள இந்த கடன் முறையின் ஊடாக ஊழியர்களின் ஊக்குவிப்பொன்று இடம்பெறுவதுடன், கிடைக்கும் வட்டியின் அடிப்படையில் சமூக பாதுகாப்பு நிதியம் அபிவிருத்தியடைகின்றது. | மூக பாதுகாப்பு ஓய்வூதிய நிதியத்திலிருந்து நிதியை அதிக பிரதிபலனுடைய முதலீட்டு வழிகளில் முதலீடு செய்து அதிக நலனை நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக இலங்கை சமூக பாதுகாப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழ் 2004ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும், உத்தேச சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முறைமைக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட பங்களிப்பாளர்களினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 10,397,234 ஆன பங்களிப்பு தொகையை பங்களீப்பாளர்களின் அடிப்படையில் பிரித்து இனங்காண முடியாதிருந்தது. | அங்கத்தவர்கள் தமது பங்களிப்புத் தொகையினை வங்கிக்கு செலுத்தும் போது, தமது பங்களிப்பு இலக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் உரிய முறையில் வழங்கப்படாமை இதற்கு பிரதானமான காரணமாக அமைவதுடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 10,397,234 ஆன இனங்காணப்படடாத பங்களிப்புத் தொகை பதிவு செய்யப்பட்ட போதிலும், இன்றளவிலும், இந்த பெறுமதி ரூபா 6,768,593 வரை குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது. மேலும், இதன் பின்னர் பணத்தை | இனங்காணப்படாத ரூபா 6,768,593 ஆன மீதியை இனங்காணுவதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான மீதிகள் உருவாகுவதை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | வங்கிக்கு செலுத்தும் போது பங்களிப்பு இலக்கத்தினை குறிப்பிடுதல் கட்டாயமாக்கப்படுவதற்கு வங்கியுடன் கலந்துரையாடி திட்டமிடப்பட்டவாறு உள்ளது. | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குறைந்த வருமானம் பெறுநர்களின் எதிர்காலத்தினை பாதுகாப்பதற்கான நடைமுறையை ஏற்படுத்தல் எனும் தலைப்பில், செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் சபையின் ஓய்வூதிய முறைமைக்கு அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் இலக்கு 35,000 நபர்களாக இலக்கிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள்ளான உள்ளபடியான ஆட்சேர்ப்புகள் 25,678 ஆகும். 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான இலங்கை சமூக பாதுகாப்பு ஓய்வூதிய நிதிய உத்தேச முறைமையின் கீழ் ஓய்வூதியம் பெறுநர்களின் எண்ணிக்கை 31,769 ஆகும். | 2020ஆம் ஆண்டு முழுவதும் கொவிட் - 19 தொற்றுநோய் பரவல் காரணமாக போக்குவரத்து தடைகள் விதிக்கப்பட்டமை, மக்கள் ஒன்றுகூடுதல் தொடர்பில் தடை விதித்தல், 17 இணைப்பு உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் ஆண்டு முழுவதும் நிலவியமை மற்றும் மேம்படுத்தல் மற்றும் விளம்பரப் பணிகளுக்காக நிதியேற்பாடு போதுமானதாக இல்லாதிருந்தமை போன்ற விடயங்கள் செயன்முன்னேற்றம் குறைவடைவதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. | எதிர்பார்த்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு உரியதாக பணிகளை முறையாக நிறைவேற்றுதல். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அடிப்படை நோக்கம் மீன்பிடி மற்றும் விவசாயமல்லாத துறைகளில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு ஓய்வுதியம் வழங்குதல் ஆகும். அதன்போது இந்த முன்மொழிவு முறைகளுக்கு அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வது இணைப்பு உத்தியோகத்தர்களின் ஊடாக ஆகும். சபைக்காக | வெற்றிடமாகவுள்ள இணைப்பு உத்தியோகத்தர் பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்குரிய நேர்முகப் பரீட்சைகள் 2021.04.27ஆந் திகதி அளவில் நிறைவே செய்யப்பட்டுள்ள போதிலும், கொவிட் - 19 நிலமை காரணமாக இந்த ஆட்சேர்ப்புகளுக்குரிய நியமனக் கடிதங்களை இதுவரையிலும் வழங்க | குறித்த ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டு சபையின் பணிப்பொறுப்பினை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

49 இணைப்பு உத்தியோகத்தர்களின் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்றறுள் 17 உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடங்கள் சுமார் 02 வருட காலமாக நிலவுகின்றது. அந்த நிலமை அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வதில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கான காரணமொன்றாக அமைந்துள்ளதாக முடியாதுள்ளது. அவ்வாறே, இந்த ஆட்சேர்ப்புகளின் தாமதத்திற்கு 2019.11.20ஆந் திகதி நிதி அமைச்சினால் அனைத்து ஆட்சேர்ப்புகளையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையும் காரணமாகும்.